பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

17 07 2025 **THURSDAY** **7.15 PM**

## தலைப்புச் செய்திகள்

1. கழிவுப்பொருள் மேலாண்மையை திறம்பட செயல்படுத்துவதற்கு அனைத்துத்தரப்பினரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

2. பொருளாதாரம், பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் தென்கொரிய அதிபரின் சிறப்பு தூதுக்குழுவினர் இன்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்து பேசியுள்ளனர்.

3. குறைந்த விலையில் நீண்ட காலத்திற்கு எரிசக்தி கிடைப்பதை இந்தியா உறுதி செய்துள்ளதாக மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப்சிங் புரி கூறியுள்ளார்.

4. பிரதமர் திரு நரேந்திர மோடியின் சிறப்பான வழிகாட்டுதலால் நாட்டில் எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி மிகப்பெரிய அளவில் வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

5. பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான உலக விளையாட்டுப் போட்டிகளின் நீச்சல் பிரிவில் இந்தியாவின் **Benediction Rohit** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--இனி விரிவான செய்திகள்-

<<<<<>>>>>

கழிவுப்பொருள் மேலாண்மையை திறம்பட செயல்படுத்துவதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று புதுதில்லியில் தூய்மை நகரங்களுக்கான விருதுகளை வழங்கி பேசிய அவர், குப்பைகளை கையாளும்போது பிளாஸ்டிக், மின்னணு கழிவுகள் மற்றும் மக்கும் பொருட்கள் என தரம் பிரிப்பதை மக்கள் வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும் என்று கூறினார்.

நாட்டின் கலாச்சாரத்தோடு தூய்மையை கடைபிடிப்பதும் இணைந்திருப்பதாக கூறிய அவர், பன்னெடுங்காலமாக நமது வாழ்க்கை முறையிலும் சுற்றுப்புறத்தை தூய்மையாக பரமரிப்பதற்கு மக்கள் மிகுந்த முக்கியத்துவம் அளித்து வந்துள்ளதாக தெரிவித்தார்.

நாட்டின் நகரங்களை தூய்மைப்படுத்துவதற்காக கொண்டுவரப்பட்டுள்ள தூய்மை இந்தியா இயக்கம், உலகின் மாபெரும் தூய்மை கணக்கெடுப்பு இயக்கமாக உருவெடுத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசின் முனைப்பான நடவடிக்கைகளின் பயனாக பிளாஸ்டிக் பொருட்களால் ஏற்படும் பாதிப்பு கணிசமாக குறைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மக்கள் அன்றாட வாழ்க்கையில் தங்களுக்கு தேவையான பொருட்களை முறையாக பயன்படுத்துவதன்மூலம், கழிவுப்பொருட்களின் அளவை குறைக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இயற்கைக்கு உகந்த வாழ்க்கை முறையை கடைபிடிப்பதன்மூலம், தூய்மையை பராமரிக்கலாம் என்பதற்கு பழங்குடியின மக்களின் வாழ்க்கை முறை சிறந்த உதாரணமாக திகழ்வதாக அவர் குறிப்பிட்டார்.

தூய்மை இந்தியா இயக்கத்தில் அனைவரும் முழு அர்ப்பணிப்போடு பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக்கொண்ட குடியரசுத்தலைவர், 2047-ஆம் ஆண்டுக்குள் முற்றிலும் தூய்மையான இந்தியாவை நம்மால் உருவாக்க முடியும் என்று கூறினார்.

<<<<<>>>>>

தென்கொரியாவுடன் பாதுகாப்பு, பொருளாதாரம், தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பில் இருதரப்பு உறவுகளை இந்தியா வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

புதுதில்லியில் இன்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்த தென்கொரிய அதிபரின் சிறப்புத்தூதுக்குழுவினர், இருநாட்டு மக்களுக்கு இடையிலான தொடர்புகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் ஆலோசித்தனர்.

இந்த சந்திப்பு குறித்து தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு ஜெய்சங்கர், தென்கொரியாவுடன் பல்வேறு துறைகளிலும் புதிய முயற்சிகளை மேற்கொள்ள இந்தியா ஆர்வம் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அந்நாட்டில் தற்போது அமைந்துள்ள புதிய அரசுடன் இணைந்து இருதரப்பு ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து ஆய்வு செய்யப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

சரக்கு போக்குவரத்திற்கான கட்டணங்கள் நடப்பாண்டு இறுதிக்குள் வெகுவாக குறையும் என்று மத்திய அமைச்சர் திரு நிதின் கட்கரி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

இதன்மூலம் ஏற்றுமதி அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்க இந்த நடவடிக்கை உதவிடும் என்றும் அவர் கூறினார்.

சுற்றுச்சூழல் பாதிப்பை தடுப்பதற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாகவும் திரு நிதின்கட்கரி கூறினார்.

<<<<<>>>>>

கடந்த 11 ஆண்டுகளில் நாட்டு மக்களின் நலனுக்கு உகந்ததாக இல்லாத ஆயிரத்து 600-க்கும் மேற்பட்ட சட்டங்கள் நீக்கப்பட்டுள்ளதாக மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புவனேஷ்வரில் இன்று நடைபெற்ற சிறந்த அரசு நிர்வாக நடைமுறைகள் என்ற தலைப்பிலான கருத்தரங்கில் உரையாற்றிய அவர், சிறந்த அரசு நிர்வாகம் மக்கள் தங்கள் வாழ்க்கையை சிரமமின்றி மேற்கொள்ள உதவிகரமாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

வெளிப்படைத்தன்மை, ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள், நெறிப்படுத்தப்பட்ட நிர்வாகம் உள்ளிட்டவை அரசு நிர்வாகத்தை எளிமைப்படுத்தி, மக்கள் தங்கள் வாழ்க்கையை சிரமமின்றி மேற்கொள்ள உதவிடுவதாகவும் அவர் கூறினார்.

சிறந்த பொது நிர்வாகத்திற்கான பிரதமரின் விருதுகளுக்கு தெரிவு செய்யப்பட்ட புதுமையான அரசு நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைக்கும் வகையில் ஒடிஷா மாநிலம் புவனேஷ்வரில் இந்த இரண்டு நாள் மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

குறைந்த விலையில் நீண்ட காலத்திற்கு எரிசக்தி கிடைப்பதை இந்தியா உறுதி செய்துள்ளதாக மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப்சிங் புரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், குறைந்த விலையில் எரிபொருள் விநியோகிக்கும் நாடுகளிலிருந்து அதிக அளவில் இறக்குமதி செய்யும் நடைமுறையை இந்தியா பின்பற்றி வருவதாக தெரிவித்தார்.

ஹைட்ரோ கார்பன் உற்பத்தியை அதிகரிப்பதற்கான முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு வருவதாக திரு ஹர்தீப்சிங் புரி கூறினார்.

<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வை மற்றும் சிறப்பான வழிகாட்டுதலால் நாட்டில் எண்ணெய் மற்றும் எரிவாயு கண்டுபிடிப்பு மற்றும் உற்பத்தி மிகப்பெரிய அளவில் வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பெட்ரோலிய அமைச்சகம் ஏற்பாடு செய்திருந்த கலந்தாய்வுக்கூட்டம் குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள டாக்டர் எல். முருகன், புதிய எரிசக்தித் திட்டங்களை கொண்டுவருவதற்கு மாநிலங்களின் பங்களிப்பு பெரிதும் உதவியதாக கூறியுள்ளார்.

நாட்டில் ஒரு லட்சத்து 91 ஆயிரம் சதுர கிலோமீட்டர் பரப்பளவுக்கு எண்ணெய் மற்றும் எரிவாயு அகழாய்வுத் திட்டங்களை மேற்கொள்வதற்கு புதுதில்லியில் நடைபெற்ற இந்த கலந்தாய்வுக்கூட்டம் வழிவகுக்கும் என்றும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

ஏமன் நாட்டில் சிறையில் உள்ள நிமிஷா பிரியாவின் வழக்கை எதிர்கொள்வதற்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்து தரப்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் இதை தெரிவித்த வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், நிமிஷா பிரியாவின் குடும்பத்தினர் வழக்கை நடத்துவதற்கு ஒரு வழக்கறிஞர், தூதரகம் மூலம் நியமிக்கப்பட்டு தேவையான சட்ட உதவிகள் அளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

அவரது குடும்பத்தினரை அங்குள்ள இந்திய தூதரகத்தின் மூலம் அதிகாரிகளை சந்தித்து பேசுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்தியா மேற்கொண்ட தூதரக நடவடிக்கைகள் காரணமாக, நிமிஷா பிரியாவுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை அந்நாடு நிறுத்தி வைத்துள்ளதாகவும் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் தெரிவித்தார்.

<<<<<>>>>>

அஸ்ஸாம் மாநிலம் குவஹாத்தி அருகே கடந்த ஆண்டு சுதந்திர தின கொண்டாட்டத்தை சீர்குலைக்க சக்திவாய்ந்த **IED** குண்டுகளை புதைத்து வைத்திருந்த வழக்கில், உல்ஃபா தீவிரவாத குழுவை சேர்ந்த இரண்டு பேரை தேசிய புலனாய்வு அமைப்பினர் கைது செய்துள்ளனர்.

நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும், பாதுகாப்பையும் சீர்குலைக்கும் நோக்கில் இந்த தீவிரவாத அமைப்பு இந்த கொடுஞ்செயலில் ஈடுபட முயன்றதாக தேசிய புலனாய்வு அமைப்பு கூறியுள்ளது.

இந்த வழக்கில் ஏற்கனவே ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

தில்லியில் ஆம் ஆத்மி ஆட்சி பொறுப்பில் இருந்தபோது நடைமுறைப்படுத்தப்பட்ட திறன் மேம்பாட்டுத் திட்டத்தில் நடைபெற்றதாக கூறப்படும் ஊழல் முறைகேடுகள் குறித்து விசாரிப்பதற்கு துணை நிலை ஆளுநர் திரு வினய் குமார் சக்சேனா உத்தரவிட்டுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய கல்வி அமைச்சர் திரு **Ashish Sood** இதனை தெரிவித்தார்.

கோவிட்-19 காலத்தில் செயல்படுத்தப்பட்ட இந்த திட்டத்தில் 145 கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் நடைபெற்றதாக பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திரு ஆஷிஷ் சூட் கூறினார்.

<<<<<>>>>>

இந்தியா – அமெரிக்கா இடையே இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் விரைவில் இறுதி செய்யப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அவர், இதுதொடர்பாக இரு நாடுகள் இடையே தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் பேச்சுக்களில் விரைவில் முடிவு எட்டப்படும் என்று கூறினார்.

<<<<<>>>>>

ஈராக்கின் **Al-Kut** நகரில் ஏற்பட்ட தீ விபத்தில் 50 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

அங்குள்ள பல்பொருள் அங்காடி மற்றும் உணவகத்தில் ஏற்பட்ட இந்த விபத்தில் சிக்கிய பலரும் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதாக **Wasit** மாகாண ஆளுநர் திரு **Mohammed Al Mayahi** தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அந்த அங்காடி மற்றும் கட்டிடத்தின் உரிமையாளர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான உலக விளையாட்டுப் போட்டிகளின் நீச்சல் பிரிவில் இந்தியாவின் **Benediction Rohit** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஜெர்மனியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 50 மீட்டர் பிரிவின் தகுதிச்சுற்றில் 12-ஆவது இடத்தை பிடித்ததன்மூலம் அவர் அரையிறுதிக்கு முன்னேறினார்.

------------

ஹங்கேரியில் நடைபெற்றுவரும் சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Sujeet** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் 65 கிலோ எடைப்பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், அல்பேனியாவின் **Islam Dudaev**-ஐ வென்றார்.

-------------------

சர்வதேச கிரிக்கெட் குழுமத்தின் முதன்மை நிர்வாக குழு உறுப்பினர்களாக இந்தியாவின் குருமூர்த்தி பழனி மற்றும் அனுராக் பட்நாகர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**<<<<<>>>>>**